## நாமக்கல் மேற்கு மாவட்டம்

# பள்ளிபாளையம் வடக்கு, பள்ளிபாளையம் மத்திய, பள்ளிபாளையம் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் குமாரபாளையம் வடக்கு, குமாரபாளையம் தெற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் மற்றும் ஒன்றிய, நகரக் கழக பொறுப்பாளர், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் நாமக்கல்மேற்கு மாவட்டம், குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டபள்ளி பாளையம் ஒன்றியம், **பள்ளிபாளையம்** வடக்கு, **பள்ளிபாளையம் மத்திய, பள்ளி பாளையம் தெற்கு**ஆகிய 3 ஒன்றியக் கழகங்களாகவும் **குமாரபாளையம் நகரம் குமாரபாளையம் வடக்கு, குமாரபாளையம் தெற்கு** ஆகிய 2 நகரக் கழகங்களாக வும் பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றிய மற்றும் நகரக் கழகப் பொறுப் பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட பள்ளிபாளையம் வடக்கு, பள்ளிபாளையம் மத்திய, பள் ளிபாளையம் தெற்கு ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர் கள் கொண்டதாகவும்-குமாரபாளையம் வடக்கு, குமாரபாளையம் தெற்கு ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாக அமையும்.

**பள்ளிபாளையம் வடக்கு ஒன்றியம் (குமாரபாளையம் தொகுதி):**1.தட்டாங்குட்டை, 2.பல்லக்காபாளையம், 3.சௌதாபுரம், 4.குப்பாண்டபாளையம், 5.கனியனூர் அக்ரஹாரம் ஆகிய 5 ஊராட்சிகள்.

**பள்ளிபாளையம் மத்திய ஒன்றியம் (குமாரபாளையம் தொகுதி):** 1.எலந்தகுட்டை, 2.பாதரை, 3.பள்ளிபாளையம் அக்ரஹாரம், 4.களியனூர், 5.சமயசங்கிலி ஆகிய 5 ஊராட்சிகள்.

**பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம் (குமாரபாளையம் தொகுதி):** 1.கொக்கராயன்பேட்டை, 2.பாப்பம்பாளையம், 3.ஓடப்பள்ளி, 4.புதுப்பாளையம், 5.காடச்சநல்லூர் ஆகிய 5 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட பள்ளிபாளையம் வடக்கு, **பள்ளிபாளையம் மத்திய, பள்ளிபாளையம் தெற்கு** ஆகிய ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின் வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**பள்ளிபாளையம் வடக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **என். நாச்சிமுத்து,** 9/46, குட்டைக்காடு, மலையடிபாளை யம், பல்லக்காபாளையம், குமாரபாளையம், நாமக்கல்மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. ஏ.ஜான்பீட்டர், தட்டாங்குட்டை, 2. எம்.ஆர். ராஜேந்திரன், குப்பாண்டபாளையம், 3. திருமதி ஆர்.ஜெயந்தி, சௌதாபுரம். 4. விஜயகுமார், களியனூர் அக்ரஹாரம். 5. எஸ்.ராஜ், தட்டாங்குட்டை. 6. எஸ். கார்த் திக், கல்லாங்காட்டுவலசு.

**பள்ளிபாளையம் மத்திய ஒன்றியம்**

பொறுப்பாளர் : **ஆர். செல்வம்,** 4/89, இ.காட்டூர், எலந்தகுட்டை, குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. ஏ.நடேசன், எலந்தகுட்டை. 2. ஆர்.செந் தில்குமார், பள்ளிபாளையம் அக்ரஹாரம், 3. எஸ்.மாதேஸ்வரன், சமயசங்கிலி. 4. பழனிசாமிகளியனூர். 5.ஆர்.கலையரசன், எலந்தகுட்டை. 6.திருமதி ஆர். கௌசல்யா, பாதரை.

**பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **ஏ.இளங்கோவன்,** கொக்கராயன்பேட்டை, பள்ளிபாளையம், குமாரபாளையம், நாமக்கல்மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. எஸ்.ராதாகிருஷ்ணன், ஓடப்பள்ளி. 2. எஸ். ஆறுமுகம், புதுப்பாளையம். 3. ஆர்.சந்திரசேகரன், காடச்சநல்லூர். 4. ஜி. கணே சன், ஓடப்பள்ளி. 5. திருமதி ஜெ.தமிழ்செல்வி ஜான்சன், பாப்பம்பாளையம், 6. எம். சம்பத்குமார், காடச்சநல்லூர்.

**குமாரபாளையம் வடக்கு நகரம்**

(குமாரபாளையம் தொகுதி): 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13,14, 15, 16, 17 ஆகிய 17 வார்டுகள்

**குமாரபாளையம் தெற்கு நகரம்**

(குமாரபாளையம் தொகுதி): 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33 ஆகிய 16 வார்டுகள்

**நகரக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **குமாரபாளையம் வடக்கு, குமாரபாளையம் தெற்கு** ஆகியநகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**குமாரபாளையம் வடக்கு நகரம்**

பொறுப்பாளர் : **எம். செல்வம்,** 7ஏ1, கிழக்கு காவேரிநகர், குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. எம்.சத்தியசீலன், 8வது வார்டு, 2. என்.கந்த சாமி, 9வது வார்டு, 3. எஸ்.ராஜ்குமார், 17வது வார்டு. 4. கே.பன்னீர்செல்வம், 14வது வார்டு, 5. ஐ.ஜேம்ஸ், 11வது வார்டு,

**குமாரபாளையம் தெற்கு நகரம்**

பொறுப்பாளர் : **எஸ். ஞானசேகரன்,** 42, ஜே.கே.கே.சுந்தரம் நகர், குமாரபாளையம், நாமக்கல்மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. எம்.செந்தில்குமார், 27வது வார்டு. 2. கே.ஏ.ரவி, 22வது வார்டு. 3. எஸ்.செல்வகுமார், 25வது வார்டு. 4. ஆர்.எஸ்.தர்ம ராஜன், 26வது வார்டு. 5. திருமதி எம்.தேவிமணி, 23வது வார்டு.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 25.5.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றியம் பாலேஸ்வரம் – மையூர்ஓடை கிராமங்களுக்கிடையே 1.70 கோடி மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியினை மாவட்ட கழக செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் துவக்கி வைத்தார்.. உடன் ஒன்றிய கழக செயலாளர் டி. குமார், ஊராட்சி மன்ற தலைவர் சுந்தரமூர்த்தி, சுப்பம்மாள், தம்பிபெருமாள், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் கார்த்திகேயன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சிவராமன், ஒன்றிய பொருளாளர் பாலமுருகன், கழக நிர்வாகிகள் பரமசிவம், முருகன், துணைத்தலைவர் தாமோதரன் விஜயகுமார், ஒப்பந்ததாரர் யோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், அனைத்துத்துறை அலுவலர்களுடன் வளர்ச்சிப் பணிகள் குறித்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (25.05.2023) ஆய்வு மேற்கொண்டார். உடன் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா, இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## சென்னை- ஆவடி - தாம்பரம்

# மாநகராட்சிகளில் மழைநீர் வடிகால் பணி!

## துறை செயலாளர் சிவ் தாஸ் மீனா ஆலோசனை!

*சென்னை,மே.26-*

*பெருநகர சென்னை மாநகராட்சி, ஆவடி, தாம்பரம் மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை உரிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றி விரைந்து மேற்கொள்ளுதல் தொடர்பாக தொடர்புடைய துறைகளின் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தலைமையில் நேற்று நடைபெற்றது.*

*நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தலைமையில், மழைநீர் வடிகால் அமைத்தல் தொடர்பாக திருப்புகழ், தலைமையிலான ஆலோசனைக் குழுவின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மேற்கொள்ளுதல் மற்றும் மழைநீர் வடிகால் பணியினை உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் விரைந்து மேற்கொள்ளுதல் தொடர்பாகவும், தென்மேற்குப் பருவமழை தொடங்கவுள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாகவும் பெருநகர சென்னை மாநகராட்சி, நீர்வளத்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஆவடி, தாம்பரம் மாநகராட்சிகள் உள்ளிட்ட தொடர்புடைய துறைகளின் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட அலுவலக கூட்டரங்கில் நேற்று (25.05.2023 ) நடைபெற்றது.*

*இந்த ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பேசும்போது தெரிவித்ததாவது :*

*மழைநீர் வடிகால் அமைத்தல் தொடர்பாக வெ.திருப்புகழ், தலைமையிலான ஆலோசனைக் குழு வழங்கிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றி மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.*

*சாலைகள் அமைக்கும் போது ஏற்கனவே உள்ள பழைய சாலையினை முழுவதுமாக அகழ்ந்தெடுத்து புதிய சாலையினை அமைத்து, சாலைகளில் பெய்யும் மழைநீரானது மழைநீர் வடிகாலில் சென்றடையும்படி அமைத்திட வேண்டும். மழைநீர் வடிகாலில் குறிப்பிட்ட இடைவெளியில் மழைநீர் சேகரிப்பு மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகள் (Silt catch pit) அமைத்திட வேண்டும். உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.*

*மழைநீர் வடிகால் அமைக்கப்படும் போது பொதுவான வழிகாட்டுதல்கள் மற்றும் ஒவ்வொரு பகுதிக்குமான பொருத்தமான வழிகாட்டுதல்களைப் பின்பற்றி வடிகால் அமைத்திட வேண்டும். நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி மழைக்காலங்களில் மழைநீர் தங்குதடையின்றி சென்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாநகராட்சி பகுதிகளில் உள்ள பூங்காக்களில் மழைநீர் சேகரிப்புக்கான நீர் உறிஞ்சும் அமைப்புகளை உருவாக்கிட வேண்டும். மழைநீர் வடிகால் பணிகளை தொடர்புடைய அனைத்து துறைகளின் ஒருங்கிணைப்புடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இப்பணிகள் அனைத்தையும் செப்டம்பர் மாதத்திற்கு முன்னதாக முடித்திட வேண்டும் எனத் தெரிவித்தார்.*

## தி.மு.க. சட்டத் துறை சார்பில்

# மாவட்ட - நீதிமன்ற - பகுதி, தலைவர் - துணைத் தலைவர் - அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் தேர்வுக்கான நேர்காணல்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, தி.மு.க. சட்டத்துறை மாவட்ட-நீதிமன்ற பகுதி, தலைவர் துணைத் தலைவர் மற்றும் அமைப்பாளர் துணை அமைப்பாளர்களைத் தேர்வு செய்திட பின்வரும் தேதியில் குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கான நேர்காணல் நடைபெறும்.

நேர்காணல் நடைபெறும் நாள் : 27-5-2023 (சனிக்கிழமை)
இடம் : கழக அலுவலகம், அண்ணா அறிவாலயம், சென்னை-18

| நேரம் | | மாவட்டம் |
|---|---|---|
| காலை 9.00 மணி | - | சென்னை கிழக்கு |
| காலை 10.00 மணி | - | சென்னை வடக்கு |
| காலை 11.00 மணி | - | சென்னை வடகிழக்கு |
| பிற்பகல் 3.00 மணி | - | சென்னை தெற்கு |
| மாலை 4.00 மணி | - | சென்னை மேற்கு |
| மாலை 5.00 மணி | - | சென்னை தென்மேற்கு |

இதில், ஏற்கனவே தி.மு.க. சட்டத்துறை சார்பில் வெளியிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து, தலைமைக் கழகத்திலோ அல்லது மாவட்டக் கழக அலுவலகத்திலோ சமர்ப்பித்தவர்கள் மட்டுமே இந்நேர்காணலில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். அத்துடன், நேர்காணலுக்கு வருபவர்கள், தாங்கள் விண்ணப்பித்த விண்ணப்பப் படிவ நகலை கொண்டுவர வேண்டும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
25. 5. 2023

**என்.ஆர். இளங்கோ எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. சட்டத் துறை

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தூத்துக்குடி என். பெரியசாமி

## மே 26 (2017)



**ஒன்றுபட்ட நெல்லை மாவட்டத்தில் 1960ஆம் ஆண்டு முதல் கழக உறுப்பினராக பதிவு செய்து கொண்ட இவர், தொடர்ந்து தூத்துக்குடி நகருக்கு உட்பட்ட வட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்து, பின்னர் மாவட்டக் கழக பிரதிநிதியாக 1977ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். அதனைத் தொடர்ந்து 1982 முதல் 1987 வரை தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும், அதன்பின்னர், தூத்துக்குடி மாவட்டக் கழகச் செயலாளராக 1987 முதல்.தொடர்ந்து தனது இறுதி காலம் வரை தலைவர் கலைஞர் அவர்களின் தடம் மாறாத தொண்டராகப் கழகப் பணியாற்றியவர். கழகப் பணிகளோடு, தொழிலாளர் நலனினும் அதிக அக்கறை கொண்ட இவர் தூத்துக்குடி மாவட்டத்தில் 36 தொழிற் சங்கங்களில் தலைவராக இருந்தவர்.**

**தூத்துக்குடி நகர்மன்றத் தலைவராகவும் – 1989,1996 ஆண்டுகளில் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று, இரு முறை சட்டப்பேரவை உறுப்பினராகப் பணியாற்றினார்.**

**1993ஆம் ஆண்டு கழகத்திற்கு சோதனை வந்த காலத்தில், தூத்துக்குடி மாவட்டத்தை கழகக் கோட்டையாக காத்து நின்றவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைவர் கலைஞர் மேல் கொண்ட அளவு கடந்த பற்றின் காரணமாக, தலைவர் கலைஞர் அவர்களே, இவரை "என்னுடைய முரட்டு பக்தன்" என்று மனமாரப் பாராட்டியவர். 2016ல் தலைமைக் கழகத்தின் சார்பில் வழங்கப்படும் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்களால் பெற்றவர். "என் மீது தனிப்பட்ட பாசத்தையும் வைத்திருந்தவர் அண்ணன் தூத்துக்குடி பெரியசாமி அவர்கள் என்பதை நினைக்கும் போது, பெருமைமிக்க தொண்டரை இழந்த சோகம் எங்களை உலுக்கிக் கொண்டிருக்கிறது." என்று கழகச் செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**